**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் : OS No: 12/2016 தேதி: 02.04.2025**

**பி.வா.சா. 1 – சங்கரவேல்**

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( வாதிகள் தரப்பில்)

தளமனைஅம்பலத்தில் நான் நிர்வாகஸ்தர் இல்லை என்றால் சரிதான். என் அப்பா பெயர் ராமசந்திரன். என் அப்பாவுடன் உடன்பிறந்தவர்கள் சக்திவேல், வீரலெட்சுமி ஆவார்கள். மேற்படியார்கள் வீரப்பசெட்டியாருக்கு இரண்டாவது தாரத்து பிள்ளைகள். முதல் தாரத்து பிள்ளை அண்ணாமலை. அண்ணாமலையின் மகன் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். என் தாத்தாவை பெற்றவர் கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியார் என்றால் சரிதான். கோபுரம்தாங்கி என்பது ஒரு புனை பெயராகும். கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியாரின் உடன்பிறந்தவர் வீரலிங்கசெட்டியார் ஆவார். அவருக்கும் கோபுரம்தாங்கி என்ற புனைபெயர் உண்டு என்றால் இல்லை. தாவா சொத்தை வீரலிங்கம்செட்டியார், வீரபத்திரன்செட்டியாரும். மற்றொரு சங்கரலிங்கம்செட்டியாரும் 1905 ல் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த கிரையம் பத்திரம் வா.சா.ஆ 5 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீரலிங்கம்செட்டியாரின் மகன் பெயர் வீரைய்யா என்றால் சரிதான். வீரைய்யாவின் மக்கள் பெயர் ராஜாராம், ராஜேந்திரன், குணாளன் என்றால் சரிதான். இன்னொருவர் உள்ளார் பெயர் தெரியாது. மேற்படி ராஜேந்திரன் 1ம் வாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராஜேந்திரன் மக்கள் தான் ராதாகிருஷ்ணன், வேல்மணி, சாந்தி என்றால் சரிதான். வாதிகள் எங்களுக்கு இரண்டாவது பங்காளிகள் என்றால் சரிதான். 1905 ஆண்டில் கிரையம் வாங்கிய மூன்று பேரின் வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் இல்லை. மேற்படி மூவரில் சங்கரலிங்கம்செட்டியார் யார் என்று தெரியாது. உயிருடன் உள்ளாரா வாரிசுகள்

யார்யார் என்று தெரியாது. தாவா சொத்தை வீரலிங்கம்செட்டியார், வீரப்பத்திரன்செட்டியாரும் பாகம் செய்யவில்லை. வேறு குடும்ப சொத்துக்களை மேற்படியார்கள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்கிய மேற்படியார்கள் மூவரும் பாகம் செய்யாமல் அருள்மிகுசுந்தரவிநாயகர்கோவில்மடத்திற்கு 1920 ஆண்டில் டிரஸ்டு பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரம் தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 ஆவணம் என்றால் சரிதான். அதில் வீரலிங்கசெட்டியாருக்கு நிர்வாக உரிமை இல்லை எனவும், சாமி கும்பிடலாம் எனவும், சரத்து காண்பிக்கப்பட்டுள்ளதாக சாட்சி தானாக முன்வந்து சொல்கிறார். டிரஸ்டு ஆரம்பித்தவர்களில் அவரும் ஒருவர் என்றால் சரியல்ல. மூன்று பேரும் சேர்ந்து தான் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தின் அசல் தளமனைஉறவின்முறைஅம்பலத்திடம் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தா வீரப்பத்திரன்செட்டியார் கொடுத்துள்ளார். 1905 ஆண்டு கிரைய பத்திரத்தையும் என் தாத்தா தளமனைஉறவின்முறைஅம்பலத்திடம் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1920 ஆண்டு பத்திரத்தில் 1, 2 நபர்களின் வாரிசுகள் அடைந்து அனுபவித்து வரவேண்டும் எனவும் வில்லங்கம் செய்ய கூடாது எனவும் சரத்து உள்ளது என்றால் சரிதான். சங்கரலிங்கம்செட்டியார், வீரப்பத்திரன்செட்டியார் வாரிசுகள் அவ்வாறு வில்லங்கம் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. 1920 ஆண்டின் பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்று தெரியாது. என்னிடம் நகல் உள்ளது. நான் தற்போது ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆவணம் தாவா சொத்திற்கு பட்டா கோபுரம்தாங்கிவீரப்பத்திரன்செட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் கோபுரம்தாங்கி என்ற புனைபெயரை வீரலிங்கசெட்டியாருக்கும் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனவே கோபுரம்தாங்கி என்ற புனைபெயர் வீரப்பத்திரன்செட்டியார், வீரலிங்கசெட்டியார்

ஆகியோருக்கும் வரும் என்றால் இருக்கலாம். தாவா டிரஸ்டை தற்போது நான் நிர்வாகம் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நான் நிர்வாகம் செய்யவில்லை என்று சொல்லுவது முன்னோர்கள் எழுதி வைத்த டிரஸ்டு ஆவணத்திற்கு விரோதமாக செயல்படுகிறேன் என்றால் தளமனைஉறவின்முறைஅம்பலத்திற்கு எழுதி வைத்துவிட்டதால் நான் நிர்வாகம் செய்யவில்லை. 1967 ஆண்டு நான் பிறந்ததில் இருந்து நிர்வாகம் செய்யவில்லை. அதற்கு முன்பு என் அப்பா நிர்வாகம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. தளமனைஉறவின்முறைஅம்பலத்திற்கு ஒப்படைப்பதற்கு முன்பு டிரஸ்டு நிர்வாகிகள் கூட்டம் போட்டு தீர்மானம் போட்டார்களா என்று தெரியாது. ஒப்படைப்பதற்கு முன்பு வீரலிங்கசெட்டியாரின் வாரிசுகளிடம் சம்மதம் வாங்கினார்களா என்று தெரியாது. தாவா சொத்தில் 100 வருடங்கள் பழைமையான ஒரு மடம் உள்ளது என்றால் 120 வருட பழைமையான மடம் உள்ளது. மற்ற இடம் எல்லாம் காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். அந்த காலத்திலிருந்த நந்தவனம் அழிந்துவிட்டது என்றால் சரிதான். கிணறு உள்ளதா என்றால் கிணறு இருந்து தூர்ந்துவிட்டது. 100 வருடங்களுக்கு முன்பு அந்த காலத்தில் போக்குவரத்து கிடையாது என்பதால் நடந்து சென்று ராமேஸ்வரத்திற்கு தரிசனம் செய்வார்கள் என்றால் சரிதான். அப்படி நடந்து போகும் பக்தர்கள் தாவா இடத்தில் உள்ள மடத்தில் தங்கி கிணற்றில் குளித்துவிட்டு அன்னதானம் சாப்பிட்டுவிட்டு செல்வார்கள் என்றால் சரிதான். இந்த நடைமுறை எனக்கு விவரம் தெரிந்தது முதல் இல்லை என்றால் சரிதான். இந்த நடைமுறையை வாதிகள் செய்ய நினைக்கிறார்கள் என்றால் நான் அதற்கு ஆட்சேபணை செய்கிறேன். மேற்படி தர்மத்தை நான் செய்ய போகிறேனா என்றால் உறவின்முறை செய்து கொண்டிருப்பதால் தற்போது செய்யவில்லை. எதிர்காலத்தில் நான் செய்ய தயாராக இருக்கிறேன். உறவின்முறைக்கு எழுதி கொடுத்ததை ரத்து செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தேவையில்லை. உறவின்முறைக்கு எழுதி கொடுத்ததை நான் எவ்வாறு தொடர்ந்து செய்ய

முடியும் என்றால் எழுதி கொடுத்த சொத்தில் நான் செய்ய முடியாது. என் தரப்பில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உறவின்முறை தாக்கல் செய்துள்ளார்கள். உறவின்முறையிடம் நான் தொடர்ந்து தர்மம் செய்ய போவதாக சொத்தை திரும்ப ஒப்படைக்க கேட்டேனா என்றால் நான் தனிப்பட்ட முறையில் சொத்தை திரும்ப கேட்க முடியாது. பங்காளிகள் அனைவரும் சேர்ந்து தான் கேட்க முடியும். பங்காளிகளில் வாதிகளை கூட்டி செல்ல தயாராக உள்ளேனா என்றால் இல்லை. தளமனைஅம்பலத்திற்கு நாங்கள் எழுதி கொடுத்த தானபத்திரத்தை பற்றி எந்த கேள்வி கேட்டாலும் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தானபத்திரத்தின் நகல் எடுத்து பார்த்துள்ளேன். அசல் பார்க்கவில்லை. அந்த பத்திரத்தில் அடித்தல்திருத்தல் நிறைய உள்ளது என்றால் ஒருசிலது உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ல் ஸ்ரீதார்மனை என்று தானபத்திரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தளமனைஅம்பலம் என்பது தான் அவ்வாறு உள்ளது. தாவா சொத்தில் எனக்கு விவரம் தெரிய தர்மகாரியங்கள் எதுவும் நடக்கவில்லை. நான் பிறந்தது முதல் தர்மகாரியங்கள் எதுவும் நடக்கவில்லை. தளமனைஅம்பலத்துகாரர்கள் தண்ணீர்பந்தல் மட்டும் நடத்தி வருகிறார்கள். தளமனைஅம்பலத்துகாரர்கள் தண்ணீர்பந்தல் நடத்தவில்லை என்றும், பராமரிக்கவில்லை எனவும் தரிசாக இருக்கிறது என்றால் சரியல்ல. எனக்கும் வீரலிங்கசெட்டியாரின் வாரிசுகளுக்கும் விரோதம் கிடையாது என்றால் சரிதான். என் முன்னோர்கள் தளமனைஅம்பலத்திற்கு எழுதி கொடுத்த தானபத்திரம் ஒரு மோசடியானது என்றும் அது சட்டப்படி செல்லாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை ஆதியில் கிரையம் செய்து கொண்ட மூவரின் வாரிசுகளுக்கு இடையே பாகம் செய்து கொள்ள சம்மதமா என்றால் இல்லை. தாவா சொத்தில் கிழக்குபக்கத்தில் தேவாங்கர் சமுகத்தின் முக்கிய நபர் எம்.டி.ராமசாமி முன்னால் எம்எல்ஏ, எம்.பி அவரின் நினைவு மண்டபம் உள்ளது என்றால் சரிதான். தர்மம் நிருவினவர்களின் சம்மதத்தின்பேரில் மேற்படி நினைவு மண்டபம்

அமைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நினைவு மண்டபத்தை தவிர மீதி இடத்திற்கு வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1996 ஆண்டு வரை வீரலிங்கசெட்டியார் பெயரிலும் அதன் பின்பு தளமனைஅம்பலம் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் வீரப்பத்திரன்செட்டியாரின் வாரிசுகள் தர்மகாரியங்கள் செய்யாத காரணத்தினால் எங்களுக்கு டிரஸ்டிகளாக இருக்க தகுதிஇல்லை என்றால் சரியல்ல. நான் சட்டப்படி டிரஸ்டில் இருந்து நீக்கப்பட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. வாதிகள் தான் தர்மத்தை தொடர்ந்து நடத்துவதற்கு உரிமை உள்ளவர்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. இந்த வழக்கு போடுவதற்கு முன்பு தளமனைஅம்பலத்துகாரர்கள் கடை கட்டி வாடகைக்குவிட முயற்சி செய்தார்கள் என்றால் இல்லை. தளமனைஅம்பலத்திற்கு எழுதி கொடுத்த தானபத்திரத்தின் படி தொடர்ந்து தர்மத்தை நடத்ததால் அவர்களுக்கும் டிரஸ்டியாக இருக்க தகுதி இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.